දේශීය ආදායම් දෙපාර්තමේන්තුව
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
INLAND REVENUE DEPARTMENT

ලේකම් අංශය
14 වන මහල
දේශීය ආදායම් ගොඩනැගිල්ල
ශ්‍රීමත් චිත්තම්පලම් ඒ ගාඩිනර් මාවත
තැ.පෙ. 515, කොළඹ 2 - ශ්‍රී ලංකාව

செயலகம்
14 வது மாடி
உள்நாட்டு இறைவரிக் கட்டிடம்
சேர் சிற்றம்பலம் ஏ காடினர் மாவத்தை
த.பெ.இல. 515, கொழும்பு -2, இலங்கை

Secretariat
14th Floor
Inland Revenue Building
Sir Chittampalam A Gardiner Mawatha
P.O. 515, Colombo 2 - Sri Lanka

ෆැක්ස් / பக்ஸ் / Fax: 011-2338574/ 2338659/ 2338635/ 2338570/ 2338543

දුරකථන / தொலைபேசி / Telephone: 011- 2135402/ 2135410/ 2135412 / 2135413/ 20135411

E-Mail – secretariat@ird.gov.lk
Web: www.ird.gov.lk


*எனது இல. : SEC/2021/07* *செப்டெம்பர் 17, 2021*

## *2021 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க, நிதிச் சட்டம் (பாகம் I)*

## *தன்னிச்சையான வெளிப்படுத்துகை மீது வரிவிதித்தலுக்கான விளக்கக்குறிப்பு*

*2021 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க நிதிச்சட்டத்தின் (இதற்கு பின்னர் "நிதிச் சட்டம்" என்று குறிப்பிடப்படும்) ஏற்பாடுகளுக்கமைவாக, வெளிப்படுத்தும் எவரேனும் ஒரு ஆள் ஒருவர் (இதற்கு பின்னர் "வெளிப்படுத்துபவர்" என்று குறிப்பிடப்படும்) உள்நாட்டு இறைவரித் திணைக்கள 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் அல்லது ஏதாவது உள்நாட்டு இறைவரிச் சட்டங்கள் (அதாவது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டம், 2006 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க சட்டம், 2000 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க சட்டம் அல்லது 1979 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க சட்டம்) மூலம் வெளிப்படுத்த வேண்டப்படுகின்றவை தொடர்பாக தனது வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்துக்கள் போன்றவைகளை உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு வெளிப்படுத்துகை செய்ய முடியும். அத்தகைய எந்தவொரு நபரும் கீழே குறிப்பிடப்பட்டுள்ளபடி, மார்ச் 31, 2022 அன்று அல்லது அதற்கு முன்னர் குறிப்பிட்ட படிவத்தில் அதனை பிரகடனம் செய்ய வேண்டும்.*

### *1. வரிவிதித்தல்*

*நிதிச்சட்டத்தின் பிரிவு 6 இன் ஏதேனும் சட்டவிலக்களிப்புகளை எதிபார்ப்புடன் பிரகடனத்தை செய்ய விரும்புகின்றவர்கள் மீது, 1% இல் தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீதான வரி என அழைக்கப்படும் ஒரு வரியானது விதிக்கப்படுகின்றது.*

### 2. *ஏற்புடையதாகின்ற ஆட்கள்*

*இவ்வரி நிதிச் சட்டத்தின் பிரிவு 6 இன் ஏற்பாடுகளின் கீழ் ஏதேனும் சட்ட விலக்களிப்புகளை எதிர்பார்க்கும் எந்தவொரு ஆளுக்கும் ஏற்புடையாவதுடன், அத்துடன் அவர்கள்,*

*a) 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான காலப்பகுதிக்கான சமர்ப்பிக்கப்பட்ட பெறுமதி சேர் வரி (இதற்கு பின்னர் "பெ.சே.வரி" என்று குறிப்பிடப்படும்) விபரத்திரட்டில் பிரகடனப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்ற ஏதாவது வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள் தொகையினை பிரகடனப்படுத்தியிருக்காமை; அல்லது*

*b) 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த ஏதேனுமொரு வரிமதிப்பீட்டாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட வருமான*

விபரத்திரட்டில் பிரகடனப்படுத்துவதற்கு வேண்டப்படுகின்ற வருமானம் அல்லது சொத்துக்களின் தொகையினை பிரகடனப்படுத்தியிருக்காமை;

அத்தகைய ஆட்கள் பெ.சே.வரிக்கு அல்லது வருமான வரிக்கு பதிவு செய்யப்படாதவராகவோ , அல்லது குறிப்பிட்ட விபரத்திரட்டு சமர்ப்பிக்காதவராகவோ இருக்கலாம். எவ்வாறாயினும், வாடிக்கையாளர்களிடமிருந்து பொருட்கள் அல்லது சேவைகள் வழங்கலுக்கான பெ.சே.வரியை சேகரித்தவர்கள் வரி விலக்குக்கு ஏற்புடையதாகமாட்டார்கள்;

ஏற்புடைய ஆட்கள் பின்வருவோரை உள்ளடக்கும்.

- வதிவுள்ள தனியாட்கள்;
- வதிவற்ற தனியாட்கள்; (இலங்கை பிரஜை அல்லது வெளிநாட்டு பிரஜை)
- வதிவுக் கம்பனிகள்;
- இலங்கையில் வியாபாரத்தினை கொண்டு நடாத்தும் வதிவற்ற கம்பனிகள்;
- பங்குடமைகள்;
- நம்பிக்கை நிதியம் அல்லது நம்பிக்கைப்பொறுப்பாளர்கள்;
- கூறு நம்பிக்கை பொறுப்புகள் மற்றும் பரஸ்பர நிதியங்கள்;
- கழகங்கள் அல்லது சமூக அமைப்புக்கள்;
- நிதியங்கள்;
- அரச சார்பற்ற நிறுவனங்கள்;
- தரும நிறுவனங்கள்;
- ஏனைய ஆட்கள் குழு.

## 3. ஏற்புடையதல்லாத ஆட்கள் மற்றும் தொகைகள்

*3.1* பின்வரும் ஆட்கள் ஏற்புடைய ஆட்களினுள் உள்ளடக்கப்படாததுடன், அவர்களுக்கு நிதிச்சட்டத்தின் பிரிவு 6 இன் ஏற்பாட்டின் கீழ் வழங்கப்பட்ட வரி விலக்களிப்புக்கு ஏற்புடையனவாதலாகாது.

அதாவது பின்வரும் சட்ட ஏற்பாடுகளின் கீழ்-

(i) 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கல் தடைச்சட்டம்,
(ii) 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டம்,
(iii) இலஞ்சச் சட்டம் (26 ஆம் அத்தியாயம்),
(iv) 2008 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, போதையூட்டும் ஔடதங்களினதும் உளமருட்சி ஏற்படுத்தும் பதார்த்தங்களினதும் சட்டத்திற்கு முரணான வியாபாரத்திற்கெதிரான சமவாயங்கள் சட்டம்

(அ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்து தொடர்பாக ஏதேனும் புலனாய்வு அல்லது சட்ட நடவடிக்கைகள் முடிவுறாதுள்ளனவோ அந்த எவரேனுமாள்; அல்லது

(ஆ) வெளிப்படுத்தப்படாத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்து தொடர்பாக ஏதேனும் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழான தவறொன்றுக்குக் குற்றத் தீர்ப்பளிக்கப்பட்டுள்ள எவரேனுமாள்;

*3.2* உள்நாட்டு இறைவரி சட்டங்கள், பெ.சே.வரிச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க பந்தயம் மற்றும் சூதாட்ட வரிச்சட்டம், 2002ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க நிதிச்சட்டம், 1982 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க முத்திரை தீர்வை சட்டம் அல்லது 2006 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க முத்திரை தீர்வை (விசேட ஏற்பாடு) சட்டம் போன்ற ஏதாவது சட்டத்தின் கீழ் மதிப்பீட்டு வழங்கப்பட்டுள்ள வெளிப்படுத்தப்பட்டிராத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்துக்களின் ஏதாவது தொகையைக் கொண்டுள்ள ஆள் உள்ளடக்கப்படாத்துடன், நிதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் வழங்கப்படும் சட்ட விலக்களிப்புக்கு தகைமை பெறமாட்டார்.

## *4.* வெளிப்படுத்தப்பட வேண்டிய தொகை

*2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த எந்தவொரு வரிக்காலப்பகுதிக்கான பெறுமதி சேர் வரி விபரத்திரட்டில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்காத வெளிப்படுத்தாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின் தொகை அல்லது 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்று முன்னரான ஏதேனுமொரு வரிமதிப்பீட்டாண்டின் வருமான விபரத்திரட்டில் பிரகடனப்படுத்தப்பட்டிருக்காத வெளிப்படுத்தாத வருமானம் அல்லது சொத்து, வெளிப்படுத்துவற்கு தகுதி வாய்ந்த தொகைகள் ஆகும்.*

*ஆளொருவர், வெளிப்படுத்தாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின் மீது பெறுமதி சேர் வரியைச் சேகரித்திருந்தால், அவர் வெளிப்படுத்தாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளை வெளிப்படுத்தாத வருமானம் அல்லது சொத்து ஆகியவற்றுடன் இணைத்து வெளிப்படுத்தலாம். ஆனால் வெளிப்படுத்தப்படாத வருமானம் மற்றும் சொத்தின் மீது மட்டுமே சட்ட விலக்களிப்புகள் வழங்கப்படும்.*

## *5.* அனுமதிக்கப்பட்ட முதலீடுகள்

### *5.1* பணமாக வைத்திருக்கும் வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை அல்லது வருமானம்

*நிதிச் சட்டத்தின் பிரிவு 3 இன் கீழ் சில சட்ட விலக்களிப்புகளை எதிர்பார்க்கும் எவராவது ஆள், 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் அவருடைய வெளிப்படுத்தப்பட்டிராத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்து (பணம்) தொகைகளை இவற்றில் முதலீடு செய்வதற்கு வேண்டப்படுகின்றனர்.*

*a)* ஒரு வதிவுள்ள கம்பனியினால் வழங்கப்பட்ட பங்குகளில்;
*b)* இலங்கை அரசாங்கத்தின் சார்பில் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட திறைசேரி முறிகள் அல்லது திறைசேரி உண்டியல்களில்;
*c)* இலங்கையில் வதிவுள்ளதொரு கம்பனியினால் வழங்கப்பட்ட எவையேனும் பட்டியல்படுத்தப்பட்ட கூட்டிணைப்பு தனிசுப் பிணையங்களில்; அல்லது
*d)* **இலங்கையிலுள்ள** ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தில்.

*இல்லையெனில், அத்தகைய ஆள் 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதிக்கு முன்னர் இலங்கையில் உள்ள ஒரு வங்கிக் கணக்கில் அதே தொகையை காசாக வைப்புச் செய்ய முடியும். மேலும், ஏதாவதொரு வெளிநாட்டு நாணயத்தில் இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே*

*வைத்திருக்கப்படும் பணத்தை பிரகடனத்திற்கு முன்னர் இலங்கையில் உள்ள ஏதாவது வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட முடியும்.*

*அந்த வெளிநாட்டு நாணயத்தை, இலங்கை ரூபாயிலோ அல்லது வெளிநாட்டு நாணயத்திலோ, இலங்கை மத்திய வங்கியின் விதிமுறைகளுக்குட்பட்டு, பணத்தினை வைப்புச் செய்வது என்பது வெளிப்படுத்துபவரின் தெரிவாகும்.*

*மேற்படி முதலீடுகள் அல்லது வைப்புக்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர், வெளிப்படுத்துபவர்கள் தங்களுடைய பிரகடனப்படுத்தலை சமர்ப்பிக்க அனுமதிக்கப்படுகின்றார்கள்.*

*5.2* ***சொத்துக்களில் முதலிடப்பட்ட வெளிப்படுத்தப்படாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை அல்லது வருமானம்***

*எவரேனும் ஆள் தனது* ***வெளிப்படுத்தப்படாத*** *வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்துக்களின் தொகையை, 2021 செப்டெம்பர் 15ம் திகதிக்கு முன்னர்,*

- *a)* ***ஒரு வதிவுள்ள கம்பனியினால்*** *வழங்கப்பட்ட பங்குகள்;*
- *b) இலங்கை அரசாங்கத்தின் சார்பில்* ***மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட*** *திறைசேரி முறிகள் அல்லது திறைசேரி உண்டியல்கள்;*
- *c) இலங்கையில் வதிவுள்ளதொரு கம்பனியினால் வழங்கப்பட்ட* ***எவையேனும் பட்டியல்படுத்தப்பட்ட*** *கூட்டிணைப்பு தனிசுப் பிணையங்கள்;*
- *d) இலங்கையினுள் அல்லது வெளியில் உள்ள ஏதேனும் அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்; அல்லது*
- *e) இலங்கையிலுள்ள வங்கிக்கணக்கில் வைப்பு (இலங்கை நாணயத்தில் அல்லது வெளிநாட்டுக் கணக்காக பராமரிக்கப்படும்).*

*என்பவற்றில் முதலிட்டிருந்தால், அத்தகைய ஆள் நிதிச்சட்டத்தின் கீழ், ஒரு பிரகடனத்தை மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் மேற்குறிப்பிட்ட முதலீடுகளை அல்லது வைப்புகளை பிரகடனத்தில் பிரகடனப்படுத்த முடியும்.*

*6* ***பொருள்கோடல்கள்***

***"சொத்து"*** *என்பது பணம் அல்லது ஏதாவது* ***அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனம்*** *என்பவற்றைக் குறிக்கின்றது. அத்துடன் வங்கி மீதிகள், நிதிசார் சாதனங்கள், பங்குகள், பெறுதிகள், திறைசேரி உண்டியல்கள், நிலையான வைப்புக்கள், கால வைப்புக்கள், முறிகள் அல்லது வேறு வகையினவான வைப்புக்கள், பிணைப்பொறுப்புக்கள் அல்லது கடன்கள் என்ற வகையாகக் கொடுக்கப்பட்ட பணம், கையிலுள்ள காசு, இரத்தினக்கல் அல்லது தங்கம், வேறேதேனும் பணவகையான உரிமை என்பன உள்ளடங்கலான பணம். ஏதேனும் அருவச்சொத்து வரிசெலுத்துனரினால் (வெளிப்படுத்துபவர்) வேறு எவரேனும் ஆளிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டிருந்தாலன்றி அதனை உள்ளடக்காது.*

***"அசைவற்ற ஆதனம்"*** *என்பது இலங்கையில் அல்லது வெளிநாட்டில் நிர்மாணிக்கப்பட்ட அல்லது நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஏதேனும் கட்டடத்தையும் உள்ளடக்குகின்றது.*

***"அசைவுள்ள ஆதனங்கள்"*** *என்பது தங்கம் உட்பட இலங்கையில் அல்லது வெளிநாட்டில் உள்ள எல்லா வகையினதுமான அசைவுள்ள ஆதனத்தையும் உள்ளடக்குகின்றது. ஆனால் பணத்தை உள்ளடக்காது.*

*அதனடிப்படையில், வியாபாரம் இருப்பு, வியாபார கடன்பட்டோர், கடன்கள் அல்லது ஏனைய வருமதித் தொகைகள், இரத்தினக்கற்கள், ஆபரணங்கள், வாகனங்கள், வீட்டு உபகரணங்கள், இயந்திரங்கள் மற்றும் கணணி உபகரணங்கள் போன்றவையும் அசைவுள்ள ஆதனங்கள் மற்றும் சொத்துக்களாகக் கருதப்படும். பணம் என்பது ஒரு சொத்தாகக் கருதப்படுகின்றது. ஆனால் அசைவுள்ள சொத்தாகக் கருதப்படுவதில்லை. இச்சொத்துக்களின் சந்தைப் பெறுமதி அல்லது*

*கிரயத்தை நிரூபிப்பதற்கு, வெளிப்படுத்துனர் வியாபார இருப்பை வெளிப்படுத்தும் போது அங்கீகரிக்கப்பட்ட கணக்காய்வாளரிடமிருந்தான உறுதிப்படுத்தல், வியாபார கடன்பட்டோர் அல்லது வருமதித் தொகை தொடர்பில் உரிய கடன்பட்டோரிடமிருந்தான உறுதிப்படுத்தல், இரத்தினக்கற்களுக்கு தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் அதிகார சபையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் அல்லது மதிப்பீடு போன்றவற்றை சமர்ப்பிக்க முடியும்.*

*வெளிப்படுத்தப்படாத சொத்துக்களானது நிதிக்குத்தகை வசதியின் கீழ் கொள்வனவு செய்யப்பட்டிருந்தால், 2020 ஆம் ஆண்டு மார்ச் 31 இல் உள்ளவாறு நிதி ஒப்பந்தத்தின் பிரகாரம் செலுத்தப்பட்ட அனைத்து குத்தகை கொடுப்பனவுகளும் ( ஆரம்பத்தில் செலுத்தப்பட்ட குத்தகை கொடுப்பனவுகளையும் உள்ளடக்கி) குத்தகை ஒப்பந்த பிரதிகள் மற்றும் குத்தகை வழங்கியவரிடமிருந்தான உறுதிப்படுத்தல் கடிதத்துடன் பிரகடனப்படுத்த முடியும்*

***7. வரிக்கணிப்பீடு***

*நிதிச் சட்டத்தின் பிரிவு 4 இன் கீழ் சட்ட விலக்களிப்புகளை வேண்டுகின்ற ஆள், பின்வருமாறு கணிப்பிடப்படுகின்ற **"தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீதான வரி"** என அழைக்கப்படும் 1% வரியினைச் செலுத்த வேண்டும்.*

a) *வெளிப்படுத்துபவர், வெளிப்படுத்தப்பட்டிராத ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகள், வருமானம் அல்லது சொத்துக்களை (பணம்) வெளிப்படுத்த கருதுமிடத்து, முதலீடு செய்யப்பட்ட தொகை அல்லது வைப்புச் செய்யப்பட்ட காசு மீது 1% வரியினைக் கணிப்பீடு செய்ய முடியும்.*
b) *வெளிப்படுத்துபவர், எதாவது அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனங்களை வெளிப்படுத்த கருதுமிடத்து, வெளிப்படுத்தும் தினத்தில் (அல்லது கிட்டிய தினத்தில்) அத்தகைய ஆதனத்தின் சந்தைப் பெறுமதி மீது 1% வரியனைக் கணிப்பீடு செய்ய முடியும்.*

*பணமானது வெளிநாட்டு நாணயத்தில் இருக்கும்போது அல்லது சொத்தானது இலங்கைக்கு வெளியில் வைத்திருக்கும் சந்தர்ப்பங்களில் மதிப்பீடு பின்வருமாறு பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்;*

i. *குறித்த தொகையின் உறுதிப்படுத்தல் அல்லது சொத்தின் மதிப்பீடு உரிய வங்கி அல்லது உரிய அதிகார சபையிடமிருந்து வெளிநாட்டு நாணய வடிவில் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும்.*

ii. *பிரகடனப்படுத்தும் தினத்தில் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட கொள்வனவுக்கான நாணய மாற்று வீதத்தில் அம்மதிப்பீடானது இலங்கை ரூபாய்க்கு மாற்றப்பட வேண்டும்.*

*2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டத்திற்கமைவாக மேற்குறிப்பிட்ட செலுத்தப்பட்ட வரியானது ஒரு வரிவரவாக அல்லது ஒரு செலவினமாகக் கருதப்படமாட்டாது என்பதுடன் எந்தவொரு சூழ்நிலையிலும் அத்தொகை மீளளிக்கப்படமட்டாது.*

***8. வெளிப்படுத்துகையை சமர்ப்பித்தல்***

*நிதிச் சட்டத்தின் பிரிவு 3 இல் குறிப்பிட்டபடி ஏதாவது ஏதேனும் வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகவருமானம் அல்லது சொத்துக்களை , முதலீடோ அல்லது வைப்போ செய்துள்ளதுடன் தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீதான வரியினைச் செலுத்தியுமுள்ள ஆட்கள் நிதிச் சட்டத்தின் பிரிவு 5 இன் கீழ் பிரகடனத்தை சமர்ப்பிப்பதற்கு உரித்தானவர்கள்.*

*அதனடிப்படையில், 2022 மார்ச் 31ம்திகதியோ அல்லது அதற்கு முன் தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீதான வரியினைச் செலுத்தியபின் வெளிப்படுத்துகையை சமர்ப்பிக்க வேண்டும். இப்படிவத்தை உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் இணைய முகப்பில்* ***தரவிறக்கம் படிவங்கள்/ தன்னிச்சையான வெளிப்படுத்துகைமீதான வா/மற்றும் விபரத்திரட்டுக்கள்ழ(TVD)*** *தரவிறக்கம் செய்ய முடியும்.*

*வெளிப்படுத்துபவர்கள்,* ***"2021 ஆம் ஆண்டின் 18ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 6ஆம் பிரிவின் கீழ் தன்னிச்சையான வெளிப்படுத்தல் மீது வரியைச் செலுத்தி சட்ட விலக்களிப்புகளை எதிர்பார்க்கும் ஆட்களுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளல் மற்றும் வெளிப்படுத்துகையைக் கோப்பிடுதல் தொடர்பான வழிகாட்டல்"*** *எனும் தலைப்பில் SEC/2021/06 குறிப்பு இலக்கத்தில் 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் 17, இல் வழங்கப்பட்ட சுற்றுநிருபத்தைப் பார்க்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.*

## *9.* ***வெளிப்படுத்துகையை ஏற்றுக்கொள்ளல்***

*வெளிப்படுத்துகையானது நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக இணங்குமாயின், அந்தக் ஏற்றுக்கொள்ளுகைக்கான பற்றுச்சீட்டு வெளிப்படுத்துகை கிடைத்து 30 நாட்ளுக்குள் வெளிப்படுத்துனருக்கு வழங்கப்படும்.*

*நிதிச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக வெளிப்படுத்துகையானது இணங்கியொழுகாதிருப்பின், அத்தகைய வெளிப்படுத்துகையானது உரிய காரணங்களுடன் நிராகரிக்கப்படுவதுடன், நிராகரிப்பு அவ்வெளிப்படுத்துகை கிடைத்து 30 நாட்ளுக்குள் பதிவுத்தபால் மூலம் அறியத்தரப்படும்.*

*பின்வரும் சூழ்நிலைகளில் வெளிப்படுத்துகை நிராகரிக்கப்படும்.*

- *a. முதலீடு அல்லது வைப்பு தேவைப்பாடுகளை பிரகடனப்படுத்துபவர் பூர்த்தி செய்யத்தவறுதல்,*
- *b. தன்னிச்சையான வெளிப்படுத்தல் வரி செலுத்தப்பட்டிருக்காமை,*
- *c. பிரகடனப்படுத்தலானது குறிப்பிடப்பட்ட பிரயோகிக்கக்கூடிய படிவத்தில் இல்லாமை,*
- *d. பிரகடனப்படுத்துபவர் உரிய திகதிகளில் மேற்கொள்ளாமை,*
- *e. உள்நாட்டு இறைவரி திணைக்களத்தால் ஏற்கனவே வெளிப்படுத்தப்படாத் தொகைக்கு வரிவிதி வழங்குகை, வருமானம் அல்லது சொத்து தொடர்பான மதிப்பீடுகள் வழங்கப்பட்டிருந்தால்,*
- *f. ஆணையாளர் நாயகத்தால் கூறப்பட்ட வேறேதேனும் காரணங்கள்*

*எவ்வாறாயினும் நிராகரிப்பு கடிதத்தில் குறிப்பிட்டுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்யக்கூடியதாக இருந்தால், நிராகரிக்கப்பட்ட அவ்வெளிப்படுத்துகைக்குப் பதிலாக புதிய வெளிப்படுத்துகையானது, அந்நிராகரிப்பு கடிதம் கிடைத்து 30 நாட்ளுக்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட்டிருந்தால், அப்புதிய பிரகடனம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*ஆணையாளர் நாயகத்தினால் பிரகடனத்தை ஏற்றுக்கொண்டமை அல்லது நிராகரித்தமை தொடர்பாக 30 நாட்ளுக்குள் அறிவிக்கப்படவில்லையாயின், அப்பிரகடனம் ஆணையாளர் நாயகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டதாகக் கருதப்படும்.*

*அனைத்து பிரகடனங்களும் அவற்றின் இணைப்புக்களுடன் ஆணையாளர் நாயகத்தின் மேற்பார்வையின் கீழ் பாதுகாப்பாக வைக்கப்படும்.*

## *10.* ***வெளிப்படுத்தலில் வழங்கப்பட்டுள்ள தகவல்களின் இரகசியத்தன்மை***

*நிதிச் சட்டத்தின் பிரிவு 7 இற்கு அமைவாக, ஆணையாளர் நாயகம் அல்லது எவரேனும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் அலுவலர், ஒரு வெளிப்படுத்துனரின் ஆளடையாளம் மற்றும் ஒரு வெளிப்படுத்துகையில் அடங்கியுள்ள ஏதேனும் கருமம் அல்லது விடயம் தொடர்பில் முழுமையாக இரகசியத்தை பேணிப்பாதுகாத்தலுடன்பேணிக்காத்தலில் உதவுதலும் வேண்டும்.*

*மேலும், உள்நாட்டு இறைவரிச்சட்டத்தின் பிரிவு 100 ஏற்பாட்டின் கீழ் வரிசெலுத்துனரின் இரகசியத்தை பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஏற்பாடுகளும், அத்தகைய சட்டத்தினுடாக இரகசியம் பேணலை மீறுவதற்கான தண்டனையுட்பட, இச்சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட வெளிப்படுத்துகையொன்றுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையனவாதல் வேண்டும்.*

*11.* **வெளிப்படுத்துபவர்களுக்கான விலக்களிப்புகள்**

*ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட ஒப்புகையைப் பெற்றுக்கொண்ட ஆள் அல்லது ஒப்புகை வழங்கப்பட்டதாக கருதப்பட்ட எவரேனும் ஆள், ஏதேனும் வரியை, தண்டத்தை அல்லது வட்டியைச் செலுத்துவதற்கான பொறுப்பிலிருந்து அல்லது புலனாய்விலிருந்து அல்லது குற்றவழக்குகளிலிருந்து முழு விலக்களிப்புகளையும் அனுபவிக்க உரித்துடையவராவர்.*

- *2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த வரிமதிப்பாண்டுடன் தொடர்பாக மற்றும் உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் ஏற்பாட்டின் கீழ் பிரகடனப்படுத்தப்பட்ட பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்ட வருமானம் அல்லது சொத்து தொடர்பாகவும்;*

- *2020 ஆம் ஆண்டு மார்ச் 31 ம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னர் முடிவடைந்த வரிக்காலப்பகுதியுடன் தொடர்புடைய பெ.சே. வரிச்சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பிரகடனத்தில் வெளிப்படுத்தப்பட்ட வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகை தொடர்பாகவும். எவ்வாறாயினும், வெளிப்படுத்தாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளின் மீது அல்லது ஒரு பகுதியின் மீது பெ.சே.வரியைச் சேகரித்திருந்தால், அத்தகைய வெளிப்படுத்தாத வரிவிதிக்கப்படற்பாலதான வழங்குகைகளுக்கு சட்ட விலக்களிப்புகள் வழங்கப்படமாட்டாது.*

*ஆணையாளர் நாயகத்தினால் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில், வெளிப்படுத்துபவர் தவறான அல்லது பிழையான தகவல்களை செய்யப்பட்ட பிரகடனத்தில் வழங்கப்பட்டுள்ளமை கண்டுபிடிக்கப்பட்டால், பிரகடனம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்தால் ஒப்புகை வழங்கப்பட்டிருந்தாலோ அல்லது ஒப்புகை வழங்கப்பட்டதாக கருதப்பட்டிருந்தாலோ மேலே வழங்கப்பட்ட சட்ட விலக்களிப்புகள் அனைத்தும் மீளப்பெறப்படுவதுடன், பொருத்தமான சட்டங்களின் ஏற்பாடுகளும் பிரயோகிக்கப்படும்.*

*2020 ஆம் ஆண்டு ஏப்ரல் 01 ம் திகதி அல்லது அதற்கு பின்னர் தொடங்கும் வரி மதிப்பீட்டாண்டுக்கு அல்லது காலப்பகுதிக்கு சட்ட விலக்களிப்புகள் வழங்கப்படமாட்டாது.*

***12. நிதிக்கூற்றுக்கள் மற்றும் பதிவுகளுக்கான சீராக்கங்கள்***

*மேற்கூறப்பட்ட சட்ட விலக்களிப்புகளுக்கு உரித்தான வெளிப்படுத்துபவர்கள், அவருடைய/ உருவகத்தினுடைய வெளிப்படுத்தப்படாத வியாபார சொத்துக்களை அல்லது ஏனைய சொத்துக்களை 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 இல் உள்ளவாறான பொருத்தமான ஐந்தொகையில் கணக்கு வைக்கமுடியும் (செப்டெம்பர் 30, 2021 க்கு முன்னர் பிரகடனம் ஏற்றுக்கொண்டதாக ஒப்புதல் வழங்கப்படிருந்தால்) அல்லது 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 இல் கணக்கு வைக்கமுடியும் (ஏனைய சந்தர்ப்பங்களில்).*

வெளிப்படுத்தாத சொத்துகளுக்கான சீராக்கங்களானது குறிப்பிடப்பட்ட வருடங்களுக்குரிய (2020/2021 அல்லது 2021/2022) ஐந்தொகையில் தகுந்த வருமானமாக செலவு வைக்க முடியும். எவ்வாறாயினும் ஏதாவது **பொறுப்புக் கணக்குகளை குறைப்பதற்கான** குறிப்பிடப்பட்ட சீராக்கங்கள் அனுமதிக்கப்படமாட்டாது. வெளிப்படுத்தப்படாத சொத்தானது வெளிப்படுத்தப்படாத கடன் மீது நிதியிடப்பட்டிருந்தால் அப்பொழுது தேறிய தொகை [தொகை (கிரயம்)] சொத்து கணக்குக்கு வரவு வைக்கப்படும் தொகை தகுந்த வருமானத்துக்கு செலவு வைக்கப்படும்] பொறுப்புக் கணக்கை அதிகரிப்பதன் மூலம் பொறுப்புக்கணக்குக்கு (அந்தக் கடன்) செலவு வைக்கப்படும்.

ஒரு பிரகடனப்படுத்தும் தனியாள் ஐந்தொகையை தயாரிப்பதற்கு வேண்டப்படாத சந்தர்ப்பத்தில் அவர், சட்ட விலக்குகள் வழங்கப்பட்ட தன்னுடைய வெளிப்படுத்தப்படாத சொத்துக்களை 2021 ஆம் ஆண்டு மார்ச் 31 முடிவடையும் வரி மதிப்பாண்டுக்காக சமர்ப்பிக்கப்பட வேண்டிய வருமானவிபரத்திரட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ்வெளிப்படுத்த அனுமதிக்கப்படுவர் (செப்டெம்பர் 30, 2021 க்கு முன்னர் பிரகடனம் ஏற்றுக்கொண்டதாக ஒப்புதல் வழங்கப்படிருந்தால்). அல்லது 2022 ஆம் ஆண்டு மார்ச் 31 இல் முடிவடையும் வரி மதிப்பாண்டுக்குரிய வருமான விபரத்திரட்டின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்றின் கீழ்வெளிப்படுத்த அனுமதிக்கப்படுவர் (ஏனைய சந்தர்ப்பங்களில்).

பிரகடனப்படுத்தப்பட்ட சொத்துக்கள் தொடர்பில், 01.04.2021 அன்று அல்லது அதற்கு பின்னரான ஏதாவது காலப்பகுதிக்கு உள்நாட்டு இறைவரிச் சட்டம் அல்லது பெ.சே.வரிச்சட்ட ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படக்கூடியது.

**மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு**

ஏனைய மேலதிக தெளிவுபடுத்தல்களுக்கு, நீங்கள் **tpl@ird.gov.lk** க்கு மின்னஞ்சல்களை அனுப்பமுடியும் அல்லது பின்வரும் அலுவலர்களை கீழ்வரும் தொலைபேசி இலக்கங்கள் மூலம் தொடர்புகொள்ளமுடியும்.

பிரதி ஆணையாளர்நாயகம் (வரிக்கொள்கை ,சட்டவாக்கப்பிரிவு மற்றும் சர்வதேசவிவகாரங்கள்) – 0112135300

சிரேஷ்ட ஆணையாளர் (செயலகம்) – 0112135410

ஆணையாளர் (வரிக்கொள்கை மற்றும் சட்டவாக்கப்பிரிவு) – 0112135412

சிரேஷ்ட பிரதி ஆணையாளர்கள் (வரிக்கொள்கை மற்றும் சட்டவாக்கப்பிரிவு) –

0112135**433/438/434/441/435/432**

எச்.எம்.டபில்யூ.சி.பண்டார

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம்

H. M. W. C. Bandara
Commissioner General
Inland Revenue Department
Sir Chittampalam A. Gardiner Mw
Colombo 02